

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண் : 21

## அறிவிப்புகள்
## 2016-2017

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண்–21

# அறிவிப்புகள்
# 2016–2017


**எடப்பாடி கே. பழனிசாமி**
பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும்
சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை

# அறிவிப்புகள்

## 1. தில்லை கங்கா நகரில் மேம்பாலம் அமைத்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** சென்னை ஆலந்தூர் தில்லை கங்கா நகரில் உள்ள வாகன சுரங்கப்பாதைக்கு கூடுதலாக ஒரு உயர்மட்ட சாலை மேம்பாலம் 85 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்படும்.

## 2. கோயம்புத்தூர் மாநகரில் உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைத்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** கோயம்புத்தூர் மாநகர் அவிநாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் விமான நிலையம் வரை உயர்மட்ட பாலம் அமைக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் 4.50 கோடி ரூபாய் மதிப்பில் தயாரிக்கப்படும்.

## 3. வெள்ளத்தால் சேதமடைந்த பாலங்களை திரும்பக்கட்டுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி – நாகலாபுரம் சாலை, கொரட்டூர் – தின்னனூர் – பெரியபாளையம் சாலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், நெரும்பூர் – புதுப்பட்டினம் ஆகிய சாலைகளில் வெள்ளத்தினால் சேதமடைந்த 3 பாலங்களை உயர்மட்ட பாலங்களாக 64 கோடி ரூபாய் மதிப்பில் திரும்ப புதிதாகக் கட்டப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்படும்.

## 4. தஞ்சாவூர் - காவிரி மற்றும் வெண்ணாற்றின் குறுக்கே பழைய பாலங்களை திரும்பக்கட்டுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரியாற்றின் குறுக்கே அய்யம்பேட்டை மற்றும் கணபதி அக்ரஹாரம் சாலையில் 60 ஆண்டுகள் பழமையான குறுகிய பாலத்திற்கு மாற்றாக உயர் மட்ட பாலம் 12 கோடி ரூபாய் மதிப்பிலும் வெண்ணாற்றின் குறுக்கே திருக்காட்டுப்பள்ளி – செங்கிப்பட்டி – பட்டுக்கோட்டை சாலையில் 150 ஆண்டுகள் பழமையான செங்கல் வளைவு குறுகிய பாலத்திற்கு மாற்றாக 20 கோடி ரூபாய் மதிப்பிலும் புதிய பாலங்கள் கட்டப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்படும்.

## 5. கோபி – பழைய இரும்பு பாலத்திற்கு பதிலாக உயர் மட்டப் பாலம் கட்டுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் பவானியாற்றின் குறுக்கே கரட்டடிபாளையம் – பங்களாபுதூர் சாலையில் கி.மீ 5/4 ல் உள்ள 70 ஆண்டுகள் பழமையான இரும்பு பாலத்திற்கு மாற்றாக புதிய உயர்மட்ட பாலம் 13 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்படும்.

## 6. இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** இரயில்வே திட்டப் பணிகளின் கீழ் 13 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் 749.88 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும். இப்பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை 3.90 கோடி ரூபாய் மதிப்பில் நடப்பாண்டில் தயாரிக்கப்படும்.

## 7. விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையத்தையும், கடலூர் மாவட்டத்தில் உள்ள மேல்குமாரமங்களம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் உயர்மட்ட பாலம் 38 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்படும்.

## 8. கோவை – மேட்டுப்பாளையம் இணைப்பு சாலை மேம்பாடு செய்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** கோயம்புத்தூர் விமான நிலையத்திலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மேட்டுப்பாளையம், கோத்தகிரி மற்றும் ஊட்டி வரை குறைவான தூரத்தில் விரைவாக செல்ல ஏதுவாக முதற்கட்டமாக கோயம்புத்தூர் விமான நிலையம் முதல் சித்ரா – குரும்பபாளையம் வரை உள்ள **8.60** கி.மீ நீளமுள்ள சாலையினை அகலப்படுத்தி, நேர்பாடு, மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு பணிகள் நடப்பாண்டில் **21.50** கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

## 9. சென்னை—வெள்ளத் தடுப்பு நடவடிக்கை

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி,** சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் நெடுஞ்சாலைத்துறை சாலைகள், சுரங்கப்பாதைகளில் மழை நீரை துரிதமாக வெளியேற்ற மின்மோட்டார், மின் ஆக்கி மற்றும் தேவையான சிறுபாலங்கள் மற்றும் வடிகால் வசதிகள் **31.25** கோடி ரூபாய் மதிப்பில் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

**எடப்பாடி கே. பழனிசாமி**
பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும்
சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்